பிளெயின்ஸ்பொரோவில் உள்ள யுனிவர்சிட்டி மெடிக்கல் சென்டர் ஆஃப் பிரின்ஸ்டன்

பிளெயின்ஸ்பொரோ, நியூ ஜெர்சி

| **தலைப்பு: ஃபைனான்சியல் அசிஸ்டன்ஸ் பாலிசி ("எஃப்ஏபி") ("FAP")** | | **கவனிப்பின் / சேவையின் தன்மை: பேசன்ட் ஃபைனான்சியல் சர்வீசஸ்** |
|---|---|---|
| **சமர்ப்பித்தவர்:** Carol Burkhead (கரோல் பர்க்ஹெட்), ஏ/ஆர் மேனேஜர், பேசன்ட் ஃபைனான்சியல் சர்வீசஸ் | **நிர்வாக அங்கீகாரம்:** எக்சிகியூட்டிவ் டைரக்டர், ரெவின்யூ சைக்கிள் மேனேஜ்மென்ட் | **செயல்பாட்டிற்கு வந்த தேதி**: 1/1/2016 |
| | | **அடுத்த மீளாய்வுத் தேதி**: 12/2016 |
| **வினியோகம்:** ரெவின்யூ சைக்கிள் மேனுவல் | **குழு அங்கீகாரம்**: பொருந்தக்கூடியது/அல்ல | **முந்தையதை அகற்றி மேலிட்டது:** பொருந்தக்கூடியது/அல்ல |
| | | பக்கம் 1 / 13 |

I. <u>நோக்கம்</u>

அத்தியாவசியமான அவசரக்கால அல்லது மருத்துவ ரீதியில் தேவையான, பிற ஆரோக்கியக் கவனிப்புச் சேவைகளைப் பெறுகின்ற நோயாளிகளுக்கு கிடைக்கின்ற நிதி உதவி தொடர்பான, இன்டர்னல் ரெவின்யூ சர்வீஸ் ரெகுலேசன் விதி 130266-11, இன்டர்னல் ரெவின்யூ கோடு செக்சன் 501(r), N.J.A.C. 10:52 மற்றும் நியூஜெர்சி சட்டம்(S-1797/A-2609), பப்ளிக் லா 2008, அத்தியாயம் 60 ஆகியவற்றில் வலியுறுத்தப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்க பிளெயின்ஸ்பொரோவில் உள்ள, பிரின்ஸ்டனின் யுனிவர்சிட்டி மெடிக்கல் சென்டர்("யுஎம்சிபி") ("UMCP") மற்றும் அதன் மருத்துவமனை வசதிகள் இருப்பதை உறுதி செய்வது.

II. <u>கொள்கை</u>

கிடைக்கக்கூடிய நிதி உதவித் திட்டங்கள், தகுதித் தேவைப்பாடுகள், நோயாளிகளுக்கு விதிக்கப்படும் கட்டணங்களின் கணக்கீடு, நிதி உதவிக்கு விண்ணப்பிக்கும் முறை, மற்றும் பணம் செலுத்தப்படாமல் போகும் பொழுது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பாக நோயாளிக்கு அறிவிக்கும் கட்டளை விதிகளை UMCP கடைப்பிடிக்கிறது. அஃபர்டபிள் கேர் ஆக்ட் மற்றும் ஸ்டேட் சேரிட்டி கேர் வழிகாட்டுதல்கள் அனைத்தையும் UMCP கடைப்பிடிக்கிறது. காப்பீடு செய்யப்படாத, பணம் மீளத்தரப்படுகின்ற வரம்புகள்

சட்டம் தொடர்பான நியூஜெர்சி சட்டத்தை (சட்டம் S-1797/A-2609) UMCP கடைப்பிடிக்கிறது.

அவசரக்கால மருத்துவ நிலைமைகளுக்கான கவனிப்பைத் தனிநபர்களுக்கு, நிதி உதவித் தகுதியைப் பற்றியோ அல்லது செலுத்தும் திறன் பற்றியோ கருதாமல், பாரபட்சம் இல்லாமல், UMCP அளித்திடும். ஃபெடரல் எமர்ஜென்சி மெடிக்கல் ட்ரீட்மென்ட் மற்றும் 1986 ம் ஆண்டின் ஆக்டிவ் லேபர் டிரான்ஸ்போர்ட் ஆக்ட் (“இஎம்டிஏஎல்ஏ”) (“EMTALA”) ஆகியவற்றின் தராதரங்களுக்கு இணங்கி நடப்பது UMCP யின் கொள்கை ஆகும்.

இந்த கொள்கையானது, மருத்துவ ரீதியில் அவசியமானவற்றை அளிக்கின்ற சுயேச்சையான ஒப்பந்ததாரர்கள் மற்றும் / அல்லது ஒரு UMCP மருத்துவமனை வளாகத்தில் உள்ள அவசரக்கால சேவைகள் ஆகியவற்றைக் கவர் செய்வதில்லை. இந்த சுயேச்சை ஒப்பந்ததாரர்களின் பட்டியல் (“வழங்குநர் பட்டியல்”) ஒன்று, இந்த FAP உடன் ஒரு பின் இணைப்பு A ஆக இணைக்கப்பட்டுள்ளது மற்றும் அது UMCP இணையதளமான: www.princetonhcs.org ல் கிடைக்கிறது. இந்த வழங்குநர் பட்டியல், இந்த FAP யின் கீழ் எந்த வழங்குநர்கள் கவர் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் யார் கவர் செய்யப்படவில்லை என்று குறிப்பிடுகிறது. தேவை என்றால், இந்த வழங்குநர் பட்டியல் காலாண்டுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும் மற்றும் புத்தாக்கம் செய்யப்படும்.

## III. <u>செயல்முறை மற்றும் தகுதித் தேவைப்பாடுகள்</u>

FAP -தகுதிக்காக தீர்மானிக்கப்படுவதற்கு முன்பாக, காப்பீட்டிற்கு அவர்கள் தகுதியாக இருக்கிறார்களா என்பதைத் தீர்மானிப்பதற்காக, அனைத்து நோயாளிகளும் ஒரு UMCP நிதி உதவி ஆலோசகரால் ஸ்க்ரீன் செய்யப்படுவார்கள். இந்த FAP யின் கீழ், தகுதியான தனிநபர்களுக்கு கிடைக்கக்கூடிய நிதி உதவித் திட்டங்கள் கீழே இடம் பெற்றுள்ளன.

- **மெடிக்எய்ட்;**
- **நியூ ஜெர்சி ஃபேமிலி கேர்;**
- **நியூ ஜெர்சி ஹாஸ்பிட்டல் கேர் பேமென்ட் அசிஸ்டன்ஸ் புரோக்ராம் (“சேரிட்டி கேர்”);**
- **நியூ ஜெர்சி அன்இன்சூர்ட் டிஸ்கவுன்ட்;**
- **கெட்டஸ்ட்ராபிக் இல்னெஸ் இன் சில்ட்ரன்ஸ் ரிலீஃப் ஃபன்ட்;**
- **தி என்ஜே விக்டிம்ஸ் ஆஃப் கிரைம் காம்பென்சேசன் ஆபிஸ்; மற்றும்**
- **அமௌன்ட்ஸ் ஜெனரலி பில்ட் (“ஏஜிபி”) (“AGB”).**

*தகுதித் தேவைப்பாடுகள்:*

## மெடிக்எய்ட் (Medicaid)

பல லட்சக்கணக்கான அமெரிக்கர்களுக்கு ஆரோக்கியக் கவரேஜை, மெடிக்எய்ட் வழங்குகிறது, அதில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பெற்றோர்கள், மூத்த மக்கள் மற்றும் திறனிழப்புகள் கொண்ட நபர்கள் ஆகியோர் உள்ளடங்குவார்கள். பொதுவாக, பலனளிக்கும் இந்த திட்டத்தில், ஒரு நோயாளியானவர் கண்டிப்பாக ஒரு யுனைட்டெட் ஸ்டேட்ஸ் குடிமகனாக, லீகல் அலையன் ஆக, அல்லது பெர்மனன்ட் ரெசிடன்ட் ஆக இருக்க வேண்டும், மற்றும் குறைவான வருமானம் இருக்க வேண்டும். கூடுதலாக, நோயாளிகள், நியூ ஜெர்சி மாநிலத்தில் வசிக்கும் ஒருவராக கண்டிப்பாக இருக்க வேண்டும். நியூ ஜெர்சி டிபார்ட்மென்ட் ஆஃப் ஹெல்த் மூலமாகக் கிடைக்கின்ற மெடிக்எய்டில் பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு நோயாளியின் சூழ்நிலைகளின் அடிப்படையில், தகுதியைத் தீர்மானிப்பதற்கு, UMCP நிதி ஆலோசகர்கள் உதவுவார்கள்.

## என்ஜே ஃபேமிலி கேர் (NJ FamilyCare)

என்ஜே ஃபேமிலி கேர் என்பது நியூ ஜெர்சியின் பொது நிதியில் இருந்து தரப்படும் ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்டம் ஆகும், இதில் சிஎச்ஐபி (CHIP), மெடிக்எய்ட் மற்றும் மெடிக்எய்ட் எக்ஸ்பான்சன் பாப்புலேசன்ஸ் ஆகியவை அடங்கும். என்ஜே ஃபேமிலிகேர் என்பது ஒரு கூட்டரசு மற்றும் மாநில நிதியில் இருந்து தரப்படும் ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்டம் ஆகும், இது எந்த வயதிலும் உள்ள, தகுதி படைத்த, நியூ ஜெர்சியில் குடியிருப்பவர்கள், இயலக்கூடிய ஆரோக்கியக் காப்பீட்டைப் பெறும் வகையில் உதவுவதற்காக உருவாக்கப்பட்டது. என்ஜே ஃபேமிலிகேர் என்பது பணியமர்த்துபவர் அளிக்கும் காப்பீடு இல்லாத மக்களுக்கானது ஆகும்.

என்ஜே ஃபேமிலிகேருக்கான தகுதியை நாடுகின்ற நபர்களுக்கான நிதித் தகுதியானது, அவர்களது மாடிஃபைட் அட்ஜஸ்ட்டட் க்ராஸ் இன்கம் அல்லது எம்ஏஜிஐ (MAGI) யின் அடிப்படையில் இருக்கும். என்ஜே ஃபேமிலிகேருக்கான தகுதிக்கான வழிகாட்டுதல்கள், நியூ ஜெர்சி மாநிலத்தால் உருவாக்கப்பட்டன மற்றும் அவற்றை www.NJFamilyCare.org என்ற இணையதளத்தில் காண முடியும்.  ஒரு பன்னிரண்டு மாத கால அளவில், ஒரே ஒரு முறை மட்டுமே ஒரு நோயாளி, என்ஜே ஃபேமிலிகேருக்கு தகுதியானவர் என்று கருதப்பட முடியும்.

## சேரிட்டி கேர்

சேரிட்டி கேர் அசிஸ்டன்ஸ் என்பது இலவச அல்லது குறைக்கப்பட்ட கட்டணம் கொண்ட கவனிப்பு என்பதாகும், இது நியூ ஜெர்சி மாநிலம் முழுவதும் முனைப்பான கவனிப்பு

(அக்யூட் கேர்) தரும் மருத்துவமனைகளில் உள்நோயாளியாக மற்றும் வெளிநோயாளியாக சேவைகளைப் பெறும் நோயாளிகளுக்குக் கிடைக்கிறது. சேரிட்டி கேர் டிஸ்கவுன்ட்கள், NJAC 10:52, உப அத்தியாயங்கள் 11, 12, 13 ல் நிறுவப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளுக்கு இணங்க உள்ளன.

நியூ ஜெர்சியில் வசிக்கும் பின்வரும் மக்களுக்கு சேரிட்டி கேர் கிடைக்கிறது:

1. ஹெல்த் கவரேஜ் எதுவும் இல்லாத அல்லது பில்லின் ஒரு பகுதியை மட்டும் அளிக்கின்ற கவரேஜ் உள்ளவர்கள்;

2. தனியார் அல்லது அரசு ஸ்பான்ஸர் செய்யும் கவரேஜ் (மெடிக்எய்ட் போன்றவை) எதற்கும் தகுதி இல்லாதவர்கள்: மற்றும்

3. கீழே விவரித்துள்ள வருமானம் மற்றும் சொத்துகளுக்கான கட்டளை விதிகளை (கிரிட்டீரியா) நிறைவு செய்பவர்கள்.

மாநில அல்லது கூட்டாட்சி நிரல்களுக்குத் தகுதி பெறாத மக்களுக்கு சேரிட்டி கேர் கிடைக்கிறது.

வருமானத்திற்கான கட்டளை விதிகள் – ஃபெடரல் பாவர்ட்டி கைட்லைன்ஸ் (“FPG”) ன் 200% க்குக் குறைவாக அல்லது சமமாக குடும்ப மொத்த வருமானம் உள்ள நோயாளிகள், சேரிட்டி கேரின் 100% கவரேஜுக்கு தகுதியானவர்கள் ஆவார்கள். FPG யின் 200% க்கு அதிகமாக ஆனால் 300% க்கு குறைவாக அல்லது சமமாக குடும்ப மொத்த வருமானம் உள்ள நோயாளிகள், சேரிட்டி கேர் நிரலின் கீழ் டிஸ்கவுன்ட் செய்யப்பட்ட கவனிப்புக்குத் தகுதியானவர்கள் ஆவார்கள். பின் வரும் கட்டண அட்டவணை மூலமாக, இலவசமான அல்லது டிஸ்கவுன்ட் செய்யப்பட்ட கட்டணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன:

| **எச்எச்எஸ் பாவர்ட்டி இன்கம் கைடுலைன்ஸின் ஒரு சதவிகிதமாக வருமானம்** | **நோயாளியால் அளிக்கப்படும் மெடிக்எய்ட் ரேட் சதவிகிதம்** |
|---|---|
| 200% க்கு குறைவாக அல்லது சமமாக | மெடிக்எய்ட் ரேட்டின் 0% |
| 200% க்கு அதிகமாக ஆனால் 225% க்கு குறைவாக அல்லது சமமாக | மெடிக்எய்ட் ரேட்டின் 20% |
| 225% க்கு அதிகமாக ஆனால் 250% க்கு குறைவாக அல்லது சமமாக | மெடிக்எய்ட் ரேட்டின் 40% |
| 250% க்கு அதிகமாக ஆனால் 275% க்கு குறைவாக அல்லது சமமாக | மெடிக்எய்ட் ரேட்டின் 60% |

| | |
|---|---|
| 275% க்கு அதிகமாக ஆனால் 300% க்கு குறைவாக அல்லது சமமாக | மெடிக்எய்ட் ரேட்டின் 80% |
| 300% க்கு அதிகமாக | காப்பீடு செய்யாத டிஸ்கவுன்ட் ரேட் கிடைக்கிறது |

சொத்துகளுக்கான கட்டளை விதிகள் – ஒரு நோயாளி தகுதி பெற்றவராக இருப்பதற்கு அவரது தனிநபர் சொத்துகள் சேவைக்கான தேதியன்று, $7,500 க்கு மிகையாக இருக்கக் கூடாது மற்றும் குடும்ப சொத்துகள் $15,000 க்கு மிகையாக இருக்கக் கூடாது.

நியூ ஜெர்சியில் வசிக்காத மக்களுக்கு, சேரிட்டி கேர், குறிப்பிட்ட வழிவகைகளுக்கு உட்பட்டு கிடைக்கலாம் (அவசரக்கால மருத்துவ நிலைமைகள் போன்றவை).

அவசரக்கால அல்லது மருத்துவ ரீதியில் அவசியமான பிற மருத்துவக் கவனிப்பு ஆகியவற்றுக்கு மட்டுமே சேரிட்டி கேர் கிடைக்கிறது. மருத்துவர் கட்டணங்கள், மயக்க மருந்து கட்டணங்கள், மற்றும் கதிர்வீச்சு படங்களின் பொருள் விளக்கம் (இன்டர்பிரட்டேசன்) போன்ற சில சேவைகள், மருத்துவமனைக் கட்டணங்களில் இருந்து தனியானவை மற்றும் அவற்றின் கட்டணக் குறைப்புக்குத் தகுதியாக இல்லாமல் இருக்கலாம். தயவுசெய்து இந்த FAP யின் பிரிவு II மற்றும் பின்சேர்க்கை A என சேர்க்கப்பட்டுள்ளதில் தரப்பட்டுள்ள வழங்குநர் பட்டியலில் பார்த்துக் கொள்ளுங்கள்.

**நியூ ஜெர்சி அன்இன்சூர்ட் டிஸ்கவுன்ட்**

நியூ ஜெர்சி அன்இன்சூர்ட் டிஸ்கவுன்ட் (என்ஜே சட்டம்-சட்ட வரைவு S-1797/A-2609) என்பது, காப்பீடு செய்யாத, குடும்ப மொத்த வருமானம் FPG யின் 500%க்கு குறைவாக உள்ள நோயாளிகளுக்கு கிடைக்கிறது. இருப்பினும், இந்த தள்ளுபடியை, வருமான அளவு அல்லது குடியிருப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், காப்பீடு செய்யாத அனைத்து நோயாளிகளுக்கும் பொருந்தும் வகையில், UMCP இதைத் தேர்வு செய்திருக்கிறது. காப்பீடு செய்யாத அனைத்து தனிநபர்களுக்கும் தள்ளுபடி விகிதங்களை UMCP அளிக்கிறது. இந்த திட்டத்தின் கீழ், தகுதியான ஒரு நோயாளியிடம், மெடிக்கேர் கட்டண அட்டவணையின் 115%க்கு அதிகம் ஆகாத தொகை வசூலிக்கப்படும். காப்பீடு செய்யாத பில் வரம்புகள், என்ஜே P.L.2008 c60 க்கு இணங்க இருக்கின்றன.

**கெட்டஸ்ட்ராபிக் இல்னெஸ் இன் சில்ட்ரன்ஸ் ரிலீஃப் ஃபன்ட்**

கெட்டஸ்ட்ராபிக் இல்னெஸ் இன் சில்ட்ரன்ஸ் ரிலீஃப் ஃபன்ட் என்பது, ஒரு பெருங்கேடான சுகவீனம் உள்ள குழந்தைகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.

இதற்குத் தகுதி பெறுவதற்கு, மருத்துவமனைச் செலவுகள் கண்டிப்பாக, குடும்பத்தின் மொத்த வருமானத்தின் 10% க்கு அதிகமாகவும், $100,000க்கு அதிகமாக வருமானம் எதுவும் இருப்பதன் 15% மிகுதியாகவும் இருக்க வேண்டும், மருத்துவச் செலவுகள் நேர்ந்த பொழுது அந்த குழந்தைக்கு கண்டிப்பாக 21 வயது அல்லது அதற்கு இளையவராக இருக்க வேண்டும் மற்றும் விண்ணப்பத் தேதிக்கு முன்பாக உடனடியாக 3 மாதங்களுக்கு அந்த குடும்பம் கண்டிப்பாக நியூ ஜெர்சியில் குடியிருந்திருக்க வேண்டும். கூடுதல் தகவல்களை இந்த பின்வரும் இணையதளத்தில் காண முடியும்: www.state.nj.us/humanservices/cicrf/home.

**நியூ ஜெர்சி விக்டிம்ஸ் ஆஃப் கிரைம் காம்பென்சேசன் ஆபிஸ்**

குறிப்பிட்ட குற்றச் செயல்கள் காரணமாக நேர்கின்ற, குறிப்பிட்ட மருத்துவச் செலவுகள் உட்பட, இழப்புகள் மற்றும் செலவுகளுக்காக, குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு அளிக்கும் வகையில், நியூ ஜெர்சி மாநிலமானது நியூ ஜெர்சி விக்டிம்ஸ் ஆஃப் கிரைம் காம்பென்சேசன் ஆபிஸினை நிறுவியிருக்கிறது.

நியூ ஜெர்சி விக்டிம்ஸ் ஆஃப் கிரைம் காம்பென்சேசன் ஆபிஸின் தகுதி பெறுவதற்கு, அந்த குற்றமானது கண்டிப்பாக நியூ ஜெர்சியில் நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது மாநிலத்தின் வெளியே பாதிக்கப்பட்டவர் நியூ ஜெர்சியில் வசிப்பவருக்கு கண்டிப்பாக உறவினராக இருக்க வேண்டும், பாதிக்கப்பட்டவர் அந்த குற்றத்தை 9 மாதங்களுக்குள் போலீசுக்கு ரிப்போர்ட் செய்திருக்க வேண்டும் மற்றும் பாதிக்கப்பட்டவர் அந்த குற்றப் புலானய்வு மற்றும் சட்ட நடவடிக்கைக்கு கண்டிப்பாக ஒத்துழைக்க வேண்டும். குற்றத் தேதியில் இருந்து 3 வருடங்களுக்குள் அந்த கோரிக்கை கண்டிப்பாக தாக்கல் செய்யப்பட வேண்டும் மற்றும் அந்த நோயாளி கண்டிப்பாக கள்ளங்கபடமற்றவராக, குற்றத்தால் பாதிக்கப்படடவராக இருக்க வேண்டும். கூடுதல் தகவல்களை இந்த இணையதளத்தில் காண முடியும் www.nj.gov/oag/njvictims/index.html.

**அமௌன்ட் ஜெனரலி பில்ட் (AGB)**

இன்டர்னல் ரெவின்யூ கோடு §501(r)(5) க்கு இணங்க, அவசரக்கால அல்லது மருத்துவ ரீதியில் அவசியமான கவனிப்பு தேவையிருந்தால், FAP -தகுதி பெற்ற நோயாளிகள், அத்தகைய கவனிப்புக்கு, இன்சூரன்ஸ் கவரிங் உள்ள ஒரு தனிநபரிடம் வசூலிப்பதற்கு அதிகமாக கட்டணம் விதிக்கப்பட மாட்டார்கள்.

இந்த FAP யின் கீழ் உதவிக்குத் தகுதியான நோயாளிகள் அனைவரும், இந்த டிஸ்கவுன்டிற்குத் தகுதியாக இருக்கலாம். அவர்களது குடும்ப மொத்த வருமானம் FPG யின் 200%க்கு அதிகமாக ஆனால் 300% க்கு குறைவாக அல்லது சமமாக இருந்தால், காப்பீடு செய்யாத நோயாளிகள் மற்றும் குறைவாக காப்பீடு செய்த நோயாளிகள் இதில் அடங்குவர்கள்.

IV. <u>நோயாளிகளுக்கு விதிக்கப்படும் கட்டணங்களின் கணக்கீடு</u>

UMCP தனது AGB சதவிகிகத்தைக் கணக்கீடு செய்வதற்கு, லுக்-பேக் முறையைக் கடைப்பிடித்திருக்கிறது. இந்த AGB சதவிகிதமானது, ஒரு 12 மாத கால அளவில் மெடிக்கேர்-கட்டணம்-அனைத்து-சேவை+தனியார் ஆரோக்கியக் காப்பீட்டாளர்கள் ஆகியோரால் அனுமதிக்கப்படும் கோரிக்கைகள் அனைத்தையும் கூட்டி, அதை இந்த கோரிக்கைகள் தொடர்பான மொத்த தொகைகளால் வகுத்து அதன் அடிப்படையில் வருடாந்திரம் கணக்கீடு செய்யப்படுகிறது.

இந்த AGB சதவிகிதம் தொடர்பான கூடுதல் தகவல்கள் மற்றும் இந்த சதவிகிதம் எவ்வாறு கணக்கிடப்பட்டது என்பது பற்றிய விபரங்கள், கேட்டுக் கொள்ளும் பொழுது கிடைக்கிறது.

FAP-தகுதி பெற்றவராக தீர்மானிக்கப்பட்ட எந்த ஒரு தனிநபரும், இன்டர்னல் ரெவின்யூ கோடு §501(r)(5) க்கு இணங்க, அவசரக்கால அல்லது மருத்துவரீதியில் அவசியமான பிற ஆரோக்கியக் கவனிப்பு சேவைகளுக்காக AGB க்கு அதிகமாக கட்டணம் விதிக்கப்பட மாட்டார்கள். AGB யினை தீர்மானிப்பதற்கு, இந்த பொருந்தக்கூடிய AGB % ஆனது மொத்த கட்டணத்திற்கு செயல்படுத்தப்படும்.

எந்த ஒரு FAP-தகுதி பெற்ற தனிநபர் எப்பொழுதுமே, AGB க்கு குறைவாக அல்லது இந்த FAP யின் கீழ் கிடைக்கக்கூடிய எந்த ஒரு டிஸ்கவுன்ட் செய்த விகிதத்தின் கீழ் கட்டணம் விதிக்கப்படுவார்.

V. <u>நிதி உதவிக்கு விண்ணப்பிக்கும் முறை</u>

நிதி உதவிக்குத் தகுதியான நோயாளிகளுக்குக் கிடைக்கின்ற நிதி உதவித் திட்டங்களை நோயாளிக்குத் தெரிவிக்கும் தேவைப்பாடுகளை UMCP கடைப்பிடிக்கிறது.

காப்பீடு செய்யாத அனைத்து தனிநபர்களும், அவர்களது வருமான அளவு அல்லது குடியிருப்பு நிலை ஆகியவற்றைப் பற்றி பொருட்படுத்தாமல், நியூ ஜெர்சி காப்பீடு இல்லாத டிஸ்கவுன்டிற்கு தகுதியானவர்கள் ஆவார்கள்.

சேரிட்டி கேருக்கான ஒரு வேண்டுகோள் மற்றும் நிதி உதவிக்கான ஒரு தீர்மானம் ஆகியவை, இந்த வருவாய் சுழற்சியின் எந்த ஒரு முனையிலும் செய்யப்படலாம். தகுதி என்பது அந்த சேவைத் தேதியில் இருந்தும் மற்றும் தகுதியின் கால அளவு என்பது பெறப்பட்ட சேரிட்டியின் வகை மீதும் அமைந்திருக்கிறது. சேரிட்டி கேருக்கான தகுதிக் கட்டளை விதிகளை நிறைவு செய்யும் நோயாளிகள், கண்டிப்பாக ஒரு பூர்த்தி செய்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்த ஒரு விண்ணப்பம் கண்டிப்பாக, UMCP யின் தேவைப்பாடு பட்டியலில் பட்டியலிட்டுள்ளபடி தேவைப்படும் ஆவணத்தைக் கொண்டிருக்க வேண்டும், அது ஒரு தனி ஆவணம் ஆகும், அது கேட்டுக் கொள்ளும் பொழுது கிடைக்கிறது மற்றும் அது UMCP யின் இணையதளத்தில் அடங்கியுள்ளது: www.princetonhcs.org.

தேவைப்படும் ஆவணமானது, பூர்த்தி செய்த, பங்கேற்றலுக்கான நியூ ஜெர்சி ஹாஸ்பிட்டல் கேர் அசிஸ்டன்ஸ் புரோக்ராம் அப்ளிகேசன் (“விண்ணப்பம்”) ஒன்றுடன் கண்டிப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒரு விண்ணப்பதாரர் அல்லது அவருக்குப் பொறுப்பான நபர், சேரிட்டி கேரினை அல்லது குறைக்கப்பட்ட கட்டணம் கொண்ட சேரிட்டி கேரினைத் தீர்மானிப்பதற்கான, நிறைவு செய்த ஒரு விண்ணப்பத்தை, அந்த சேவை தேதியில் இருந்து ஒரு வருடம் வரை (365 நாட்கள்) அல்லது டிஸ்சார்ஜுக்குப்-பிந்தைய பில் பற்றிய அறிக்கை தேதியில் இருந்து 240 நாட்கள் வரை; இவற்றில் எது அதிகமோ அது வரை சமர்ப்பிக்கலாம்.

நிதி உதவி பற்றிய தீர்மானிப்பு சாத்தியமான அளவில் விரைவில் எடுக்கப்படும்; முழுமையான விண்ணப்பம் பெறப்பட்ட தேதியில் இருந்து 10 வேலை நாட்களுக்கு உள்ளாக, விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்கப்படும். ஒரு FAP-தகுதித் தீர்மானிப்பு செய்யும் வகையில், போதிய ஆவணங்களை அந்த விண்ணப்பம் கொண்டிரா விட்டால், அந்த விண்ணப்பம் முழுமையற்றது என கருதப்படும். ஒரு முழுமையற்ற விண்ணப்பம் பெறப்பட்டால், 10 வேலை நாட்களுக்கு உள்ளாக, விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்கப்படும். ஒரு FAP-தகுதித் தீர்மானிப்பு செய்யும் வகையில் தேவைப்படும் கூடுதல் தகவல்கள் மற்றும் /அல்லது ஆவணங்களை இந்த எழுதப்பட்ட அறிவிப்பு விவரிக்கும், மேலும் இந்த FAP யின் பிரிவு VI ல் விவாதித்துள்ள UMCP பிளெயின் லாங்க்வேஜ் சம்மரி (“PLS”) யின் ஒரு பிரதியும் அது கொண்டிருக்கும். வேண்டப்படும் கூடுதல் ஆவணங்களை அளிப்பதற்கு, நோயாளிகளுக்கு ஒரு நியாயமான கால அவகாசமாக 30 நாட்கள் தரப்படும். கூடுதலாக, UMCP அல்லது அவர்களது சார்பில் செயல்படும் ஏதேனும் மூன்றாம் தரப்பினர், ஒரு FAP-தகுதித் தீர்மானிப்பு செய்யப்படும் வரையில், இந்த காலத்தின் பொழுது, பணம் பெறுவதற்காக, இந்த FAP யின் பிரிவு VII ல்

விவரிக்கப்பட்டுள்ள, அசாதாரணமான பண வசூல் நடவடிக்கைகள் (“ECAs”) எதையும் நிறுத்தி வைப்பார்கள். மறுக்கப்பட்ட சேரிட்டி கேர் விண்ணப்பதாரர்களுக்கு அந்த மறுப்பிற்கான காரணங்கள் எழுத்து வடிவில் தெரிவிக்கப்படும் மற்றும் இந்த FAP யின் கீழ் கிடைக்கக்கூடிய பிற டிஸ்கவுன்ட்கள் கிடைப்பது பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படும்.

இந்த விண்ணப்பம் மற்றும் இந்த துறையைத் தொடர்பு கொள்வதற்கான தகவல்கள், (http://www.princetonhcs.org) என்னும் UMCPP இணையதளத்தில் கிடைக்கின்றன அல்லது தபால் மூலமாகவும், நேரில் வருகை தந்தும் அல்லது நிதி ஆலோசகருடன் ஒரு அப்பாயின்ட்மென்டிற்கான கால அட்டவணை செய்தும் இவற்றை வேண்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலமாக ஒரு விண்ணப்பத்தை வேண்டிக் கொள்வதற்கு அல்லது நிதி ஆலோசகருடன் ஒரு அப்பாயின்ட்மென்டிற்கான கால அட்டவணை செய்வதற்கு, நோயாளி (609) 853-7852என்ற எண்ணை அழைக்கலாம்.

பின் வரும் முகவரியில் அமைந்துள்ள UMCPP யின் பேசன்ட் ஆக்சஸ் சர்வீசஸில், காகிதப் பிரதிகளைக் கட்டணம் இல்லாமல் பெற்றுக் கொள்ளலாம்:

University Medical Center of Princeton<br>One Plainsboro Road<br>Plainsboro, NJ 08536

பேசன்ட் ஆக்சஸ் சர்வீசஸ் ஆனது சென்டர்ஸ் ஆஃப் கேர் உள்ளேயே, ஏட்ரியத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இது இயங்கும் நேரங்கள் திங்கள் கிழமை முதல் – வெள்ளிக் கிழமை வரை காலை 7:30 முதல் மாலை 4:00 வரை.

நிறைவு செய்த விண்ணப்பங்கள் (தேவைப்படும் ஆவணங்கள் உட்பட) தபாலில் அல்லது நேரில் அளிக்கப்பட வேண்டிய முகவரி:

University Medical Center of Princeton<br>Patient Access Services, Financial Counselor<br>One Plainsboro Road, Office # T1144<br>Plainsboro, NJ 08536

நிறைவு செய்த விண்ணப்பம் ஒன்றை ஒரு நோயாளி சமர்ப்பித்ததும், UMCP இவற்றைச் செய்யும்:

1. அந்த நபருக்கு எதிரான ECAக்கள் எதையும் நிறுத்தி வைக்கும் (UMCP சார்பில் செயல்படும் ஏதேனும் மூன்றாம் தரப்பினரும் கூட, மேற்கொள்ளப்பட்ட ECAக்களை நிறுத்தி வைப்பார்கள்);

2. உரிய கால அளவில், ஒரு FAP-தகுதித் தீர்மானிப்பைச் செய்வது மற்றும் ஆவணப்படுத்துவது; மற்றும்
3. அந்த தீர்மானிப்பு பற்றியும் மற்றும் அந்த தீர்மானிப்பிற்கான அடிப்படை பற்றியும் எழுத்து வடிவில், சம்பந்தப்பட்ட தரப்பினர் அல்லது நபருக்குத் தெரிவிப்பது.

FAP-தகுதியானவர் என்று ஒரு நோயாளி கருதப்பட்டால், UMCP இவற்றைச் செய்யும்:

1. FAP-தகுதியான அந்த தனிநபர் தர வேண்டிய தொகை, அந்த தொகை எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது மற்றும் AGB தொடர்பான தகவல்கள் எவ்வாறு பெறப்படலாம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டும் ஒரு பில் அறிக்கையை அளிப்பது;
2. அந்த தனிநபரால் தரப்பட்ட மிகையான தொகைகள் எவற்றையும் திருப்பித் தருவது; மற்றும்
3. அந்த கடனை வசூலிப்பதற்காக அந்த நோயாளிக்கு எதிராக எடுக்கப்பட்ட ECA க்கள் எதையும் பின்னோக்கித் திருப்புவதற்காக, UMCP சார்பில் செயல்படும் மூன்றாம் தரப்பினருடன் பணி செய்து, கிடைக்கக்கூடிய அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுப்பது.

## VI. FAP யினை பரவலாக அறியப்படச் செய்வதற்கான நடவடிக்கைகள், விண்ணப்பம் மற்றும் PLS

இந்த FAP யின் ஒரு PLS யினை UMCP உருவாக்கியிருக்கிறது. ஒரு PLS என்பது, இந்த FAP யின் கீழ் அந்த மருத்துவமனை வளாகம் நிதி உதவி அளிக்கிறது என்று ஒரு தனிநபருக்குத் தெரிவிக்கின்ற ஒரு எழுதப்பட்ட அறிக்கை ஆகும் மற்றும் அது கூடுதல் தகவல்களை, தெளிவான, சுருக்கமான மற்றும் புரிந்து கொள்வதற்கு எளிதான மொழியில் வழங்குகிறது.

UMCP'யின் FAP, விண்ணப்பம் மற்றும் PLS ஆகியவை ஆங்கிலத்தில் கிடைக்கின்றன மற்றும் 1,000 க்கு குறைவான தனிநபர்கள் கொண்ட அல்லது UMCP'யின் முதன்மைச் சேவைப் பகுதியின் 5% கொண்டிருக்கின்ற, ஆங்கிலத்தில் வரம்புக்கு உட்பட்ட தேர்ச்சி ("LEP") கொண்ட மக்கள் தொகையினரின் முதன்மை மொழியிலும் கிடைக்கின்றன. கூடுதலாக, மொழி வியாக்கியானம் (இன்டர்பிரட்டேசன்) மற்றும் மொழி பெயர்ப்பு ஆகிய சேவைகளையும் UMCP அளிக்கிறது மற்றும் அது பார்வை, பேச்சு, கேட்கும் திறன் அல்லது புலனறிவு ஆகியவற்றில் பழுதுகள் கொண்ட நோயாளிகளுக்கும், அந்த நோயாளியின் தேவைகளை நிவர்த்தி செய்யும் முறையில் தகவல்களைத் தருகிறது.

இந்த FAP, விண்ணப்பம் மற்றும் PLS ஆகிய அனைத்தும் இந்த UMCPP இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன: http://www.princetonhcs.org, மற்றும் அவை கட்டணம் இல்லாமல், வேண்டிக் கொள்ளும் பொழுது கிடைக்கின்றன. அவசரக்காலப் பிரிவு மற்றும் அனுமதி/பதிவுப் பிரிவுகள் ஆகியவை உள்பட, மருத்துவமனை முழுவதிலும் உள்ள பல்வேறு பகுதிகளிலும் அவற்றின் காகிதப் பிரதிகள் கிடைக்கின்றன.

நிதி உதவி கிடைப்பது பற்றி எங்களது நோயாளிகளுக்குத் தெரிவிப்பதற்கான குறியீடுகள் அல்லது காட்சிப் படங்கள், அவசரக்கால அறைகள் மற்றும் அனுமதி/பதிவுப் பிரிவுகளில் வைக்கப்படுகின்றன. இந்த குறியீடுகள் ஆங்கிலம் மற்றும் ஸ்பெயின் மொழியில் வைக்கப்படுகின்றன.

அனைத்து நோயாளிகளுக்கும், இந்த PLS யின் ஒரு பிரதியானது, இன்டேக் அல்லது டிஸ்சார்ஜ் செயல்முறையின் ஒரு பாகமாக அளிக்கப்படும்.

அனைத்து திட்டங்களின் கிடைக்கும் தன்மையும், பில் அறிக்கைகளில் தெரிகின்றன. ஒவ்வொரு பில் அறிக்கையும், நிதி உதவி கிடைக்கக்கூடிய தன்மை பற்றி பெறுநருக்குத் தெரிவிக்கும் வகையில், தெளிவாக எழுதப்பட்ட அறிவிப்பினைக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த அறிக்கையானது, FAP யின் பிரதிகள், விண்ணப்பம் மற்றும் PLS ஆகியவற்றை ஒரு தனிநபர் எங்கே பெறலாம் என்ற விபரங்களை அளிக்கின்ற இணையதள விபரத்தையும் கொண்டிருக்கிறது. கூடுதலாக, நிதி உதவி கிடைக்கும் தன்மை மற்றும் அந்த விண்ணப்பச் செயல்முறை ஆகியவை தொடர்பான கேள்விகள் நோயாளிகளுக்கு இருந்தால், அவர்கள் அழைக்கக்கூடிய தொலைபேசி எண்ணையும் அது கொண்டிருக்கிறது.

இந்த FAP யின் கீழ் கிடைக்கக்கூடிய நிதி உதவித் திட்டங்கள் பற்றி, UMCP யினால் சேவை செய்யப்படும் சமுதாயம் அறிந்திருப்பதை உறுதி செய்யும் ஒரு முயற்சியில், அதன் கம்யூனிட்டி எஜுகேசன் டிபார்ட்மென்ட் மூலமாகத் தகவல்களை UMCP பரப்புகிறது.

## VII. <u>பில் போடுவது மற்றும் பண வசூல்</u>

முறையான மற்றும் சட்டப்படியான இயக்கங்களை உறுதி செய்வதற்காக, பேசன்ட் ஃபைனான்சியல் சர்வீசஸ் (“PFS”) துறையானது அனைத்து கூட்டரசு, மாநில, உள்ளூர் மற்றும் PFS நிகர்நிலை ஒப்பந்த ரீதியிலான ஒழுங்குமுறைகள் மற்றும் தராதரங்களுக்கு இணங்கி இருக்கும். இது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கிறது, ஆனால் அதன் வரம்புக்கு உட்படவில்லை:

1. காப்பீடு மற்றும் உள்நோயாளி ஆகிய இரண்டுக்கான பில் போடும் செயல்முறைகள்;
2. பேட் டெப்ட் (மோசமான கடன்) மற்றும் மெடிக்கேர் பேட் டெப்ட் ஆகிய இரண்டின் பண வசூல்கள்;
3. "ரெகுலர்" பேட் டெப்ட் மற்றும் மெடிக்கேர் பேட் டெப்ட் ஆகிய இரண்டின் பேட் டெப்ட் ரெக்கவரி; மற்றும்
4. புரொட்டெக்டட் ஹெல்த் இன்ஃபர்மேசனின் ("PHI") ரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பைப் பராமரித்தல்.

தனிநபர்கள் அவசரக்கால மருத்துவக் கவனிப்பை நாடுவதில் இருந்து ஊக்கம் இழக்கச் செய்யும் வகையில், அவசரக்கால மருத்துவ நிலைமைகளுக்காக சிகிச்சையைப் பெறுவதற்கு முன்பாக, அவசரக்கால சிகிச்சைப் பிரிவு நோயாளிகளிடம் பணம் செலுத்தும்படி கேட்பது அல்லது ஒரு பாரபட்சமற்ற அடிப்படையில் அவசரக்காலக் கவனிப்பு அளிப்பதில் குறுக்கிடக்கூடிய சில செயல்பாடுகளை, அவசரக்காலப் பிரிவு அல்லது பிற பகுதிகளில் கடன் வசூல் செயல்பாடுகளை அனுமதிப்பது போன்ற, எந்த செயல்பாடுகளிலும் UMCP ஈடுபடாது.

UMCP தனது அவசரக்காலப் பிரிவு மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளிடம் ஊகித்தறியும் தகுதித் தீர்மானிப்புகளைப் பயன்படுத்துகிறது. ஒரு நோயாளியானவர் ஊகித்தறியும் வகையில், இந்த FAP யின் கீழ் கிடைக்கின்ற மிகத் தாராளமான உதவியைக் காட்டிலும் குறைவான தகுதி கொண்டவர் எனத் தீர்மானிக்கப்பட்டால், UMCP அந்த நோயாளியிடம், ஊகித்தறியும் நிதி உதவித் தகுதி தீர்மானிப்பின் அடிப்படை பற்றியும் அதற்கு மேலாகத் தாரளமான உதவிக்கு எவ்வாறு அவர்கள் விண்ணப்பம் செய்யலாம் என்பதையும் அவருக்கு எழுத்தில் தெரிவிக்கும். இந்த சந்தர்ப்பங்களின் பொழுது PLS யின் ஒரு பிரதியும் கூட அளிக்கப்படும்.

"நோட்டிஃபிகேசன் பீரியட்" முடிவதற்கு முன்பாக, இன்டர்னல் ரெவின்யூ கோடு§501(r)(6) ல் விளக்கியபடி, எந்த ஒரு ECA க்களிலும் UMCP ஈடுபடாது. இந்த நோட்டிஃபிகேசன் பீரியட் என்பது ஒரு 120-நாள் காலஅளவு என விளக்கப்படுகிறது, இது டிஸ்சார்ஜுக்குப்-பிந்தைய 1வது பில் அறிக்கையின் தேதியில் தொடங்குகிறது, இதில் அந்த நோயாளிக்கு எதிராக எந்த ECA க்களும் துவக்க முடியாது.

அந்த நோயாளி நிதி உதவிக்காக விண்ணப்பம் செய்திருக்கா விட்டால் அல்லது அதற்குத் தகுதியாக இல்லா விட்டால், செலுத்தப்படாத பாக்கித் தொகைக்காக, நோட்டிஃபிகேசன் பீரியடைத் தொடர்ந்து UMCP, அல்லது அவர்களது சார்பில் செயல்படுகின்ற மூன்றாம்

தரப்பினர் எவரும் அந்த நோயாளிக்கு எதிராக, பின்வரும் ECA க்களைத் துவக்கலாம்:

1. அந்த நபர் பற்றிய பாதகமான தகவல்களை, நுகர்வோர் கடன் ரிப்போர்ட் செய்யும் முகமைகளுக்கு அல்லது கிரெடிட் பிரிவுகளுக்கு ரிப்போர்ட் செய்வது;
2. ஒரு தனிநபர் சொத்தின் மீது ஒரு பற்றுரிமை (லீன்) வைப்பது;
3. ஒரு தனிநபரின் உண்மையான சொத்து மீது ஃபோர்குளோஸ் செய்வது;
4. ஒரு தனிநபர் மீது ஒரு சிவில் நடவடிக்கையைத் தொடங்குவது; மற்றும்
5. ஒரு தனிநபர் மீது பாடி அட்டாச்மென்டிற்கான ரிட் பதிவுக்கு ஆளாக்குவது.

நோட்டிஃபிகேசன் பீரியடுக்குப் பிறகு, கடமை தவறிய நோயாளியின் கணக்குகள் மீது ECA க்களைத் தொடங்குவதற்கு, மூன்றாம் தரப்பினருக்கு UMCP அதிகாரம் அளிக்கலாம். இந்த FAP யின் கீழ் நிதி உதவி பெறுவதற்கு அந்த தனிநபர் தகுதியானவரா என்று தீர்மானிப்பதற்காக நியாயமான முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை UMCP உறுதி செய்யும். எந்த ஒரு ECA யினையும் தொடங்குவதற்கு முன்பாக குறைந்தது 30 நாட்களுக்கு, பின்வரும் நடவடிக்கைகளை UMCP மேற்கொள்ளும்:

1. அந்த நோயாளிக்கு எழுதப்பட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு இருக்கிறது, அதில்:

    a. தகுதியான நோயாளிகளுக்கு நிதி உதவி கிடைக்கிறது என்பதை அது சுட்டிக் காட்டுகிறது;
    b. அந்த கவனிப்பிற்கான கட்டணத்தைப் பெறுவதற்காக UMCP தொடங்க நினைக்கின்ற ECAக்களை அடையாளம் காட்டுகிறது; மற்றும்
    c. ஒரு காலக்கெடுவை அறிவிக்கிறது, அதன் பின்னர் அத்தகைய ECAக்கள் துவக்கப்படலாம்.

2. இந்த எழுதப்பட்ட அறிவிப்புடன் PLS யின் ஒரு பிரதியை அந்த நோயாளி பெற்றிருக்கிறார்; மற்றும்

3. அந்த FAP பற்றியும் மற்றும் நிதி உதவிக்கான விண்ணப்பச் செயல்முறையில் எவ்வாறு உதவி பெறலாம் என்பதையும் அந்த நபருக்கு வாய் மொழி மூலமாகத் தெரிவிப்பதற்கு நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.